# BSNL ஊழியர் சங்கம்
# தமிழ்நாடு தொலைத்தொடர்பு ஒப்பந்தத் தொழிலாளர் சங்கம்
# தமிழ் மாநில சங்கங்கள்

## மாநிலத்தில் 7 மையங்களில் பேரணி

### ஜூலை-29, 2015 (புதன்கிழமை)

## ரூபாய் 15,000 குறைந்தபட்ச சம்பளம்
## இதுவே நமது கோரிக்கை

**அருமைத் தோழர்களே..தோழியர்களே!!!**

ஒப்பந்த முறை அமுல்படுத்தப்பட்ட துவக்க காலத்தில் LOWEST QUOTATION, LOWEST RATE, LOWEST TENDER என்பதே BSNL நிர்வாகத்தின் அணுகு முறையாக இருந்தது. அதன் விளைவாக ஒப்பந்த ஊழியர்களின் சம்பளம் மிகவும் சொற்பமாகவும், அற்பமாகவும் இருந்தது. இந்த சுரண்டல் கொடுமையை எதிர்த்து TNTCWU சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. இரு சங்கங்களும் இணைந்து ஒப்பந்த ஊழியர்களின் சம்பளப் பிரச்சினைக்காக தீவிர போராட்டத்தில் களமிறங்கினோம். மாவட்ட ஆட்சியர் நிர்ணயம் செய்த தொகையை சம்பளமாக வழங்கிட வேண்டும் என்று போராடினோம். போராட்டத்திற்குப் பின்னர் மாநில நிர்வாகம் உத்தரவிட்டது. இது முதல் முன்னேற்றம்.

அடுத்த கட்டமாக மேலும் கூடுதல் சம்பளம் வழங்கிட கேட்டு, மத்திய தொழிலாளர் நல அதிகாரிகளுக்கு மகஜர் அளித்தோம். அதிகாரிகளிடம் முறையிட்டோம். மாநில முழுவதும் தொடர்ந்து போராட்டம் நடத்தினோம். பல முறை தமிழ் மாநில பொது மேலாளர் அலுவலகத்தில் சங்கமித்து ஆவேசத்தை வெளிப்படுத்தினோம்.அதன் விளைவாக, ஒப்பந்த ஊழியர்க்கு தினசரி சம்பளம் ரூபாய் 120/150/180 + VARIABLE DEARNESS ALLOWANCE என்று மாற்றியமைத்து மத்திய அரசின் CHIEF LABOUR COMMISSIONER 20-05-2009 அன்று உத்தரவிட்டார். அதை BSNLEU மத்திய சங்கம் மற்றும் BSNLCCWF ஆகிய சங்கங்களின் கடுமையான முயற்சிகளின் காரணமாக BSNL தலைமையகம் 06-05-2010 அன்று மறுஉத்தரவாக வெளியிட்டது.இந்த உத்தரவின் விளைவாக மாநில முழுவதும் ஒரே சீரான சம்பளம், ஆறு மாதத்திற்கு ஒரு முறை பஞ்சப்படி உயர்வு என்பதை உறுதிப்படுத்தினோம் இந்த உத்தரவு வெளியிடப்பட்டு ஐந்து வருடங்கள் முடிந்து விட்டன. ஊதியம் மறுபடியும் மாற்றியமைக்கப்பட வேண்டும், உயர்த்தப்பட வேண்டும். ஆனால் இதுவரை அதற்கான துவக்க நடவடிக்கைகளை கூட மத்திய அரசாங்கம் ஆரம்பிக்கவில்லை.

இந்த சூழ்நிலையில்தான் நாடு முழுவதும் CITU உள்ளிட்ட அனைத்து மத்திய தொழிற்சங்கங்கள் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் ரூ.15,000/- என முன்மொழிந்துள்ளன. நாமும் BSNL நிறுவனத்தில் பணியாற்றும் UNSKILLED ஒப்பந்த ஊழியர்களுக்கு குறைந்தபட்ச ஊதியமாக ரூ.15,000/- நிர்ணயம் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்கின்றோம். தகுதி அடிப்படையில் SEMI-SKILLED, SKILLED, HIGHLY SKILLED ஊழியர்களுக்கு அதற்கேற்ப ஊதியம் வழங்கப்பட வேண்டும்.

இந்த கோரிக்கைகளை வலியுறுத்தி முதற்கட்ட இயக்கமாக ஜூலை மாதம் 29 ஆம் தேதி பெருந்திரளாக ஒப்பந்த ஊழியர்களையும், நிரந்தர ஊழியர்களையும் திரட்டி ஒன்றிணைந்து தமிழகத்தில் உள்ள கீழ்கண்ட மத்திய தொழிலாளர் துறை அலுவலகங்களை நோக்கி பேரணி நடத்தி கோரிக்கை மனுவை அளித்திடுவோம்.

| வ.எண் | மத்திய தொழிலாளர் அலுவலகம் | பங்கேற்கும் மாவட்டங்கள் |
|---|---|---|
| 1 | சென்னை | சென்னை, வேலூர் |
| 2 | பாண்டிச்சேரி | பாண்டிச்சேரி, கடலூர், |
| 3 | மதுரை | மதுரை, விருதுநகர், காரைக்குடி |
| 4 | தூத்துக்குடி | தூத்துக்குடி, நெல்லை, நாகர்கோவில் |
| 5 | திருச்சி | திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம் |
| 6 | கோவை | கோவை, நீலகிரி, ஈரோடு |
| 7 | சேலம் | சேலம், தர்மபுரி |

மாட மாளிகையும், கோபுரமும் கேட்கவில்லை..
குறைந்த பட்ச ஊதியம் ரூபாய் 15,000/- தான் கேட்கின்றோம்..
வருடத்திற்கு 30,000 கோடி ரூபாய் வருமானம் ஈட்டும்
BSNL நிறுவனத்தில் முதுகெலும்பாக உழைக்கின்ற..
தொழிலாளியின் உரிமையை கேட்கின்றோம்..

பெரும் திரளாக பங்கேற்போம்...கோரிக்கையை வென்றெடுப்போம்...

தோழமையுடன்

A.பாபு ராதாகிருஷ்ணன்
மாநிலச் செயலர்
BSNLEU

C.வினோத்குமார்
மாநிலச் செயலர்
TNTCWU